**01. 2015.08.05** - **තිනක්කුරල්** - **බදාදා මුල් පිටුව** - Thinakual -

**බලය බෙදීමේ එජාපයේ ස්ථාවරය වෙනසක් නෑ …**අගමැති රනිල් වික්‍රමසිංහ

BBC සිංහල සේවයට ලබාදුන් සාකච්ඡාවක් තිනකුරල් උපුටා ගෙන ඇත.

ජනවාර්ගික ප්‍රශ්නයට එක්සත් ලංකාවක් තුළ බලය බෙදීම යනු එක්සත් ජාතික පක්ෂය තුළපසුගිය කාලය පුරාවටම අවධාරණය කළ බවත් මෙවර මැතිවරණ ප්‍රතිපත්ති ප්‍රකාශනය තුළඒකීය රටක් තුළ බලය බෙදනවා යනුවෙන් අප සඳහන් කර තිබෙන නමුත් එක්සත් හා ඒකීය යන වචන දෙකේ කිසිදු වෙනසක් නැතිබවත් එය ගැටළුවක් කරනොගන්නා ලෙසත් BBC සංදේශයට අදහස් දක්වමින් පවසා ඇත.

එක්සත් සහ ඒකිය යන්න එකක් බව පවසන්නේ කෙසේද යන්න පිලිබඳව ප්‍රශ්න කළ යුතුයි ඇමරිකා එක්සත් ජනපදය , එක්සත් රාජධානිය එකමුතු රටවල් ඇයි එසේනම් එක්සත් යනුවෙන් භාවිත කරන්නේ යන්න ප්‍රශ්න කළ හැකියි

❖ **මේ පිළිබඳව පැහැදිලි**



Daily Voice in Tamil

osts of sri lanka Under No.QD/36/NEWS/2015

நகரப் பதிப்பு

பக்கங்கள்: 32 விலை: ரூபா 25/-

esday 05th August 2015. PostBox : 1615 Phone: 0117778778 ,2522555, 2523216, Fax: 2540691

ஓசை:

அதிகாரப் பகிர்வில் ஐ.தே.க.நிலைப்பாடு மாறவில்லை; ரணில்

'ஐக்கிய'த்துக்கும் 'ஒற்றை'க்கும் சிங்களத்தில் வேறுபாடு இல்லையென வியாக்கியானம்

அஸ்வின்.

இன நெருக்கடிக்கான தீர்வாக ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு என்ற நிலைப்பாட்டை கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி,

கிரமசிங்க இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக ஐக்கிய இலங்கைக்குள்ளான அதிகாரப்பகிர்வை

**පක්ෂයෙන් විමසා සිටිය යුතුයි ,සන්ධාන වේදිකාවලදී සහ සන්ධාන පුවත්පත් සාකච්ඡා මෙය කතා කළ හැකියි**

**02. 2015.08.05 - සුඩරොලි - බදාදා  මුල්පිටුව -** Sudaroli -

**රාජපක්ෂ පවුලම හිරේ යවන්න තිබ්බා මට ...**අගමැති රනිල් වික්‍රමසිංහ

රාජපක්ෂ පවුලම හිරේ යවන්න බලය තමන් සතු බව අග්‍රාමාත්‍ය රනිල් වික්‍රමසිංහ මහතා පවසා ඇත.
මහින්ද රාජපක්ෂට විරුද්ධව ඇති චෝදනා අනුව ඔහුව හිරේදමන්න පුළුවන්, මහින්ද සමඟ විවාදයකට තමන් සූදානම් නැති බවත් ඔහු අගමැති අපේක්ෂක නොවන බවත් බැරිවේලාවත් මහින්දව අගමැති අපේක්ෂක ලෙස මෛත්‍රිපාල සිරිසෙන ජනාධිපති තුමා නම්කලොත් ඔහුගේ අභියෝගය බාරගන්න සූදානම් බවත් හෙතෙම තවදුරටත් පවසා ඇත.

මෙම
අදහස්
අග්‍රාමාත්‍ය
වරයා
කර
තේ
BC
ශය
ටහ
නට
මින්


15517944 / www.sudaroli.com / Sudarolinews Sudaroli

# ராஜபக்ஷ குடும்பத்தினரை சிறையில் போட்டிருக்கலாம்

## அதிகாரம் தன்னிடம் இருக்கிறது என்கிறார் பிரதமர் ரணில்

கே.பாரதிராஜா

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தைப்போல தானும் செயற்பட்டிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ராஜபக்ஷ குடும்ப அங்கத்தவர்களை சிறையில் போட்டிருக்கலாம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாம் ராஜபக்ஷவைப் போன்று மக்களைத் தண்டிக்கமாட் டோம். இல்லாவிட்டால் இந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறையில் போட்டிருக்கலாம். நாம் சட்டத்துக்கமையவே செயற்படுகிறோம். விசா ரணை செய்ய எமக்கு பொறிமுறை யொன்று தேவைப்படுகிறது. ஏனெனில், இந்த மோசடிகள் மூளையைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

பிபிசி சிங்கள இணைய தளத்துக்கு வழங்கிய செவ்வி யிலேயே பிரதமர் ரணில் மேற் கண்ட விவரங்களைத் தெரி வித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பேஸ்புக் பக்கத்தினூடாக விவாதத்துக்கு வருமாறு உங்களுக்கு அழைப்பு விடுத்ததாகவும். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து உங்கள் கருத்து என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் ரணில்,

பக்கம் - 11

**මම**
**ශය**
**දව**
**තුළ**
**ච්ඡා**
**හා**
**රදෑ**
**වීම**

**03. 2015.08.06 - සුඩරොලි - බ්‍රහස්පතින්දා - මුල් පිටුව -** Sudaroli -

**දෙමල සන්ධානය ප්‍රභාකරන්ගේ අවසානය තෙක් ඔහුට සහය දුන්නා....**

දෙමල සන්ධානය ප්‍රභාකරන්ගේ අවසානය තෙක් ඔහුට සහයෝගය දුන් බවත් අයිතීන් නොලැබුණු නිසයි ප්‍රභාකරන් අවි අතට ගත්තේ

මාවයි සේනාධිරාජා - මහලේකම්

දෙමල ජාතික සන්ධානය

- ❖ එබැවින් අදටත් ඔවුන් සිටින්නේ ප්‍රභාකරන් ගේ මතය දිනවීමේ අරමුණින් බව එජනිස මාධ්‍ය සාකච්ඡා තුළ කතා කිරීම මැනවි.



# உரிமைகள் மறுக்கப்பட்டதால் ஆயுதம் ஏந்தினார் பிரபாகரன்

## இறுதிவரைக்கும் அவருக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது என்கிறார் மாவை

அ. யசீகரன்

"தமிழ் மக்களுக்கான உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு அவர்களை தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்க சிங்களப் பேரினவாதம் தனது அராஜக நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட ஆரம்பித்தபோதுதான் அதற்கு எதிராக வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பக்கம் - 06

**உரிமைகள் மறுக்கப்பட்டதால்...** (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

"பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதிவரைக்கும் ஆதரவாக இருந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப்புலிகளால் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளுக்கும் நாம் ஆதரவு வழங்கினோம். அவர்களை உயர்வாக மதித்தோம். எனவே, முன்னாள் போராளிகளும் எம்மை ஆதரிக்கவேண்டும்" - என்றும் அவர் கூறினார்.

"2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கை இராணுவமயமாக்க முயன்ற மஹிந்தவை நமது கட்டுக்கோப்பான ஒற்றுமையால் - வாக்குரிமை என்ற ஆயுதத்தால் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி விரட்டினோம். அதேபோன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் எமது உணர்வுகளையும் ஒற்றுமையையும் சரியான முறையில் பயன்படுத்தி எமது பேரம் பேசும் சக்தியை உலகுக்கு உணர்த்தவேண்டும். எமது போராட்டங்களும் தியாகங்களும் வீண்போகக்கூடாது - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்ற சர்வதேச விசாரணைக்கு மட்டுமல்ல, பல்வேறு ஊழல், மோசடி விசாரணைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்.

சில தினங்களின் முன் ராஜபக்ஷ மீது 2,481 மில்லியன் மோசடி தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த இனவாதிகளையும் மோசடிப்பேர்வழிகளையும் பாதுகாக்க எமது வாக்குகளைச் சிதறடிக்க வந்துள்ளவர்கள் மீது எம் மக்கள் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் இனவாதிகள்தான். இவர்கள் எம்மை அடக்கியாள முனைபவர்கள்தான். டக்ளஸ் தேவானந்தாவும் கஜேந்திரகுமாரும் இவர்களுக்குத் துணைபோகின்றனர். நாம் சமஷ்டி என்றவுடன் இவர்கள் கொதிப்படைகின்றனர். இவர்களுக்கு வக்காளத்து வாங்குபவர்களையும் நாம் ஒற்றுமையுடன் தோல்வியடைய செய்யவேண்டும். அதற்குத் தமிழ் மக்களின் ஆணை வேண்டும்" - என்றார்.

**04. 2015.08.06 - වීරකේසරි - බ්‍රහස්පතින්දා - 13 පිටුව -** Virakesari -

## සුදුවෑන් වලින් පැහැරගෙන ගිය අයට සිදුවූයේ කුමක්ද?

### හිටපු පොලිස් මාධ්‍ය ප්‍රකාශක ප්‍රශාන්ත ජයකොඩි ගෙන් හෙලිදරව්වක්

පසුගිය රජය සමයේ පැහැරගෙන ගිය අය දැන් ජීවතුන් අතර නැති බවත් මේ ක්‍රියා ආරක්ෂක අමාත්‍යංශයේ අනුදැනුම යටතේ සිදුවූ බවත් මැරුණු අය මුහුදට දැමූ බවත් ඒ බව ඔප්පු කරන්න තමන් සතුව සාක්ෂි ඇති බවත් හමුදා, ආරක්ෂක හා කොටි සංවිධානයෙන් ඉවත් වුණු පිරිස් මෙයට සම්බන්ධ බවත්, ඔහු පවසා ඇත.

පසුගිය මයේ ආරක්ෂක ලේකම් ගෝඨාභය රාජපක්ෂ නීතිය තම අතට ගෙන නීති විරෝධි ක්‍රියාවල සහ අපරාධ වල නියැලුණු අතර එය සාධාරණීකරණය කරනමෙන් තමන්ට බලකළ බවත් තමා එය ප්‍රතික්ෂේප කිරීමත් සමග තමාව විවිධ ප්‍රදේශවලට මාරුකර යැවූ බවත්, අවසානයේ තමන් මඩකලපුවට මාරුකළ බවත් නැගෙනහිර ආයුධ සන්නද්ධ කල්ලියක් යොදවා තමන්ව ඝාතනය කිරීමට කුමන්ත්‍රණය කළ බවත් මේ සියල්ල සාක්ෂි සහිතව තමන්ට ඔප්පුකළ හැකි බවත් මේ ක්‍රියාවලියට සම්බන්ධ අය තවමත් සේවයේ නියුතු බවත් ඔහු පවසා ඇත. ඔවුන්ට විරුද්ධව ගන්නා නීතිමය ක්‍රියාදාමයකදී තමසහයෝගය ඊට ලබාදෙන්න සූදානම් බවද පවසා ඇත

- **මෙම පුද්ගලයා පිළිබඳව නීතිමය පැතිකඩින් විමසා බලා අදාළ ක්‍රියාමාර්ග වලට එළඹීමට කටයුතු කරන්නේනම් මැනවි**

வீரகேசரி வியாழக்கிழமை, ஆகஸ்ட் 6, 2015 13

# வெள்ளை வேன்களில் கடத்தி செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?

## முன்னாள் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி விபரிக்கிறார்

(எம்.எப்.எம்.பஸீர்)

கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது வெள்ளை வேன்களில் கடத்தப்பட்டவர்கள் எவரும் தற்போது உயிருடன் இல்லை. அச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கிய கொலைக் கும்பல், சடலங் களை கடலில் மூழ்கடிக்கச் செய்ததற்கான தகவல்கள் தன்னிடம் உள்ளதாக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக் கொடி கேசரிக்கு தெரிவித்தார்.

வெள்ளை வேன் கடத்தல்கள், நாட்டை விட்டு அவர் வெளியேறியமைக்கான காரணம் உள்ளிட்டவை தொடர்பில் கேச ரியுடனான குறுகிய கருத்துப் பரிமாறல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இந்த கடத்தல்கள் மற்றும் கொலைகளுக் காக பாதுகாப்பு படைகளில் உள்ளவர்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து விலகி அர சாங்கத்தில் இணைந்து கொண்ட ஆயுதக் குழுக்களையும் சூட்சுமமாக அதற்குப் பயன்படுத்திக் கொண்டதாகவும் அதன் பிரதிபலனே தான் நாட்டை விட்டு வெளி யேறியமை எனவும் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது,

கடந்த காலத்தில் பாதுகாப்பு செயலாள ராக செயற்பட்ட கோத்தபாய ராஜபக்ச சட் டத்தை கையில் எடுத்துக்கொண்டு தன்னிச் சையாக செயற்பட்டார்.

அவர்களின் குற்றங்கள் மற்றும் சட்ட விரோத செயல்களை நியாயப்படுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளராக அப்போது கடமையாற்றிய எனக்கு வலியுறுத்தப்பட் டது. அதனை நான் நிராகரித்தேன். அதன் பிரதிபலன் எனக்கு பல இடமாற்றங்கள் கிடைத்தன. இறுதியாக என்னை மட்டக்க ளப்பிற்கு மாற்றம் செய்து கிழக்கு ஆயுதக் கும்பல்களை பயன்படுத்தி கொலை செய்ய திட்டமிட்டனர். அதன் பலனாகவே நான் நாட்டை விட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது .

கடந்த காலத்தில் மனிதர்கள் வாழ்வதா? இல்லையா? எவ்வளவு காலம் வாழ்வது? என்பதனை குறித்து தீர்மானித்ததும் மஹிந்த ராஜபக்ஷவும் மற்றும் கோத்தபாய ராஜபக் ஷவுமாவார்.

வெள்ளை வேன்களில் கடத்திச் செல்லப் பட்டவர்களின் விதியும் இதுவாகும். குறித்த குழு நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கியது. அதற்கு தொடர்புடையவர் களும் இராணுவத்தில் இருந்த நபர்களே

அந்தக் காலத்தில் கொலன்னாவை நகர முதல்வரை கடத்திச் சென்றதும் இந்நபர் களே. மக்கள் அக்குழுவை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்த போதிலும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் ஊடாக சந்தேக நபர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.

இந்த வெள்ளை வேன் கடத்தல்கள் தொடர்பில் என்னிடம் போதுமான அளவு ஆதாரங்கள் உள்ளன. நான் பொய் சொல்லவில்லை. இந்த கடத்தல்கள் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் இன்னும் கடமையில் உள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை அவசியமாகும். அதற்காக ஒத்துழைக்கவும் தயாராகவே உள்ளேன் என்றார்.

**05. 2015.08.05** - ටැමිල් මිරර් - බදාදා - **4පිටුව** - Tamil mirror -4

**තොරතුරු එළිවීම තම ආරක්ෂාවට තර්ජනයක්..**

පසුගිය සමයේදී සිදුවූ දේ මාධ්‍ය තුළින් හෙලිවුවොත් තම ආරක්ෂාවට තර්ජනයක් බව හිටපු කොටි සාමාජිකයින්ගේ දේශපාලන පක්ෂයක් වන ප්‍රජාතන්ත්‍රවාදී සටන්කරුවන්ගේ පක්ෂයේ අපේක්ෂක හා වේලුපිල්ලෙයි ප්‍රභාකරන් ගේ හිටපු පෞද්ගලික ආරක්ෂක, චේන්දන් හෙවත් නවීන්ද්‍ර පවසා ඇත.

கடந்தகால தகவல்களை வெளியிடுவது

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

ஜ.போ.க.வின் வேட்பாளரும் பிரபாகரனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலருமான நவிந்திரா தெரிவிப்பு

■ ரொமேஸ் மதுசங்க

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனின் மெய்ப் பாதுகாவலராக கடமையாற்றிய தான், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கிணக்க விடுவிக்கப்பட்டுள்ளேன். இவ்வாறானதொரு நிலையில், கடந்த காலத் தகவல்களை வெளியிடுவது பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழு வேட்பாளர் சிவாநாதன் நவீந்திரா கூறினார்.



தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இயங்கி, பின்னர் பாதுகாப்பு தரப்பினரால் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் பலர், எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சைக்குழுவில் போட்டியிடுகின்ற நிலையிலேயே, 32 வயதான சிவாநாதன் நவீந்திராவும் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளார்.

இதன்போது, தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "நான் தற்போது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் அல்ல. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனநாயக வழியில் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன்" என்றார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அப்பாவிப் பொதுமக்கள் அன்று அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்தனர். மக்களின் இந்த நம்பிக்கை மற்றும் சக்தியின் காரணமாகவே புலிகள் இயக்கம் அக்காலத்தில் சிறப்பாக இயங்கியது.

ஆனால் இன்று, எமது மக்கள் கல்வி, சுகாதாரம், காணி, விவசாயம், அனாதரவு, விதவைக்கோலம், சொத்துக்கள் இழப்பு மற்றும் எதிர்ப்பார்ப்புகள் கலைந்துபோதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இப்பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதே எமது கட்சியின் நோக்கமாகும். மக்களின் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் கண்டறிந்து தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு வடக்கிலுள்ள பிரபல அரசியல் கட்சிகள் தவறிவிட்டன" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை முன்னாள் போராளிகளுக்கு வழங்குமாறு நாம் முன்வைத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்தமையானது மாபெரும் தவறாகும். அவர்களை அதிகாரத்தில் அமர வைப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை தற்போது அவர்கள் மறந்துவிட்டார்கள். இன்று அவர்கள் வடக்கு, கிழக்கில் தங்களது அரசியல் பலத்தை தக்கவைத்துக்கொள்ள புலிகள் இயக்கமே உதவியது என்பதை அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றி, அவர்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி அரசியலில் நீடித்திருக்க கூட்டமைப்பினர் முயற்சித்தாலும் அது வெற்றியளிக்காது. அதற்காக, எமது கட்சி மிகவும் பலம்வாய்ந்த கட்சியாக உருவாக்கப்படும்" என்றும் நவீந்திரா கூறினார்.

யாழ்ப்பாண மக்கள், எமது கட்சி மீது நம்பிக்கை கொண்டு பாரிய ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றனர். அத்துடன், வட மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இம்முறை தேர்தலில் நாம் சுயேட்சைக் குழுவாக போட்டியிடுகின்ற போதிலும், தேர்தலின் பின்னர் நாம் இதனை புதிய கட்சியாகப் பதிவு செய்து எதிர்காலத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியாக தேர்தல்களில் போட்டியிடுவோம்" என அவர் மேலும் கூறினார்.

**06. 2015.08.05 - ටැමිල් මිරර් - බදාදා - 05 පිටුව කතුවැකිය** - Tamil mirror - 4

**හිටපු කොටි සාමාජිකයන්ගේ පක්ෂයේමැතිවරණ ප්‍රකාශයේ මැතිවරණ ප්‍රකාශනයේ තිබ්බේ මොනවාද ?...**

1987 අගොස්තු 4 වැනිදා එල් ටී ටී ඊ නායක ප්‍රභාකරන් ගේ "ඉන්දියාවට ආදරෙයි" යනුවෙන් යාපනය සුදුමලෙයි සාමා කෝවිල අසල පැවැත්වූ සුදුමලෙයි ප්‍රඥප්තිය ඓතිහාසික ලියවිල්ලක් බැවින් හිටපු කොටි සාමාජිකයින් ගේ පක්ෂයේ ප්‍රතිපත්තිය එම දිනයේදීම එළිදක්වමින් එම සුදුමලෙයි ප්‍රඥප්තියම තම ප්‍රතිපත්ති ප්‍රකාශනය ලෙස එළි දක්වා ඇත.

එමෙන්ම තමන් එල් ටී ටී ඊ නායක



P8 புதன்கிழமை, 05 ஓகஸ்ட் 2015

ஆசிரியர்

# ஜனநாயகப் போராளிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுவதென்ன?

அனைத்துக் கட்சிகளும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டு வருகின்றன. பெரும்பாலான கட்சிகள் அனைத்தும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ள நிலையில், முன்னாள் போராளிகளை உள்ளடக்கிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

1987ஆம் ஆண்டு, ஓகஸ்ட் 4ஆம் திகதி – தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் "இந்தியாவை நேசிக்கின்றோம்" என்னும் தலைப்பில் சுதுமலை அம்மன் கோயில் வளாகத்தில் உரையாற்றப்பட்ட "சுதுமலைப் பிரகடனம்" வரலாற்று சான்றாக இன்னமும் பார்க்கப்படுகிறது. அதே ஓகஸ்ட் 4ஆம் திகதியே ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமும், அதே சுதுமலை அம்மன் கோயில் வளாகத்தில் வைத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தினூடாக, தாங்கள் இன்னமும் தேசியத் தலைவரின் கொள்கை அடிப்படையிலேயே பயணிக்கிறோம் என்பதை ஜனநாயகப் போராளிகள் எடுத்தியம்புவதனூடாக, எதிர்காலத்தில் அவர்கள் எந்தளவு சிக்கல்களுக்கு முகம்கொடுக்கப் போகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. வெறுமனே வாக்குச் சேகரிப்புக்காக மாத்திரம் தேசியக் கொள்கைகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முனைவதனூடாக, முன்னாள் போராளிகள் என்ற முத்திரை – பல கோணங்களில் சிக்கல்களைக் கொண்டுவரக்கூடிய துர்பாக்கியநிலை காணப்படுவதென்னமோ உண்மைதான்.

ஆனாலும், தாங்கள் கொண்ட கொள்கையினை அழகான முறையில் வாக்காளர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில், அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் விதமாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருப்பதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

"ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் தமது சமூக, பண்பாட்டு, பொருளாதார, நிர்வாக மற்றும் அரசியல் விவகாரங்களைத் தாமே ஆளுகை செய்யும் அதிகாரங்கள், தமிழ் பேசும் மக்களுக்கு உரித்தாக்கப்பட வேண்டும் என்பதுவே ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இலக்காகிறது.

இந்த அதிகாரங்கள் அனைத்துமே – தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப் படையிலும் தமது ஒன்றுபட்ட பாரம்பரிய தாயகப் பிரதேசத்தில் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதன் அடிப்படையிலுமே அங்கிகரிக்கப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் சுய ஆளுகைப் பிரச்சினைக்குத் தீர்வாக – இலங்கை நாட்டின் பிரிவினையை ஒரு முடிந்த முடிவாக ஜனநாயகப் போராளிகள் கட்சி வலியுறுத்தவில்லை" என்று அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்லாமல், "சக தமிழ் பேசும் இனக்குழுமங்களான மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு, தத்தமது தனித்துவ சமூக அடையாளங்களையும் வழக்காறுகளையும் பேணிக் காத்து, கௌரவமாக வாழ்வதற்கு இருக்கும் உரிமையை ஜனநாயகப் போராளிகள் கட்சி அங்கிகரிக்கின்றது" என்று குறிப்பிடுவது மட்டுமல்லாமல், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்களையும் கோடிட மறக்கவில்லை.

ஆக, இவர்கள் கூறவருகின்ற விடயங்களை நடைமுறைச் சாத்தியமாக்கவேண்டிய கடப்பாடு தலைமைத்துவத்துக்கு இருப்பது போலவே, உறுப்பினர்களின் உரிமையை பாதுகாக்க வேண்டிய தேவையும் இருக்கிறதென்பதை உணர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் மக்களின் தீர்மானமே மகத்தான தீர்மானம் என்ற யதார்த்தத்தினையும் அனைவரும் புரிவது கட்டாயமாகிறது.

**07. 2015.08.06-සුඩරොලි - බ්‍රහස්පතින්දා - 09පිටුව -** Sudaroli -

**රටේ සුදුවෑන් ඇතිකළේ**

රටේ සුදුවැන් කළේ බවත් වරක් ඥාතියෙක් දුරකථනයෙන් අමතා ඔයාගේ

**සංස්කෘතිය ගෝඨාභය**

සංස්කෘතිය ඇති ගොඨාභය රාජපක්ෂ තම පවුලේ පැහැරගත් විට තමා මහින්ද රාජපක්ෂට මල්ලි මගේ

# வெள்ளை வான் கலாசாரத்தை ஏற்படுத்தியவர் கோட்டாபய


## மேர்வின் சில்வா தெரிவிப்பு

நாட்டில் வெள்ளை வான் கலா சாரத்தை ஏற்படுத்தியவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ என முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கந்தளாயில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பரப் புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த நாட்டைத் தனது கைக்குள் வைத்துக்கொண்டு மஹிந்த ஆட்சி செய்துவந்தார். கடந்த அரசாங்கத் தில் மஹிந்த மீது பெரும்பாலான



அமைச்சர்களுக்கு கசப்புணர்வு இருந்துவந்தது. அதனை வெளிக் காட்ட முடியாத ஒரு சூழ்நிலையை யும் மஹிந்த ஏற்படுத்தியிருந்தார்.

வெள்ளை வான் கலாசாரத்தைக் கொண்டு நடத்தியதும் மஹிந்தவின் குடும்பமே. இவ்வாறானதொரு ஆட்சி இந்நாட்டுக்கு மேலும் தேவைதானா என நாட்டுமக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். மஹிந்த குடும்பத்தின் சொத்துக்கள் அனைத்தையும் வெளி நாடுகளின் வங்கிகளிலும் வேறு வியாபார நடவடிக்கைகளிலும் இவர் கள் முதலீடு செய்துள்ளார்கள். எனது குடும்பத்தின் மூன்று சொந்தக்காரர் களை வெள்ளை வானில் கடத்திக் கொண்டு சென்றார்கள்.

உடனே மஹிந்தவுடன் தொடர்பு கொண்டு உங்களது தம்பி எனது குடும் பத்தைச் சேர்ந்த மூன்று பேரைக் கடத்தியுள்ளார். அவர்களை உடன டியாக விடுதலை செய்யவேண்டும் என்றேன். பின்பு அம் மூவரையும் விடுவித்தார்கள். இல்லையென்றால் சுட்டுத் தள்ளியிருப்பார்கள். இவ் வாறுதான் மஹிந்தவின் ஆட்சியில் கொலைகள் அரங்கேறின.

எனவேதான் மக்கள் ஜனாதிபதித் தேர்தலின்போது எவ்வாறு சிந்தித்து வாக்களித்தார்களோ அதேபோன்று இம்முறையும் சிந்தித்து ஐக்கிய 'தேசிய முன்னணி அரசுக்கு வாக்களி யுங்கள் - என்றார்.

# திட்டம் கைவிடப்படாது

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

தேசிய அரசு அமைக்கும் திட்டம் கைவிடப்படமாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும், அமைச்ச ருமான லக்ஷ்மன் கிரியெல்ல இத னைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர் தலின் பின்னர் தேசிய அரசு அமைக் கத் திட்டமிட்டுள்ளோம். ஒட்டுமொத்த நாடாளுமன்றமே அரசாக இயங்கக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப் படும். முழு நாடாளுமன்றமுமே நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக்கூடிய நிலைமை உருவாக் கப்படும்.

சிறுபான்மை மக்கள் துன்புறுத் தப்பட்டு, தனித்தனியாக பிளவடைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்தலில் தோல்வியைத் தழுவுவது உறுதியாகியுள்ள காரணத்தினால் எதிர்க்கட்சிகள் போலிப் பரப்புரையில் ஈடுபட்டுவருகின்றன. இதன் ஒரு கட்டமாகவே அண்மையில் புளு மெண்டலில் தாக்குதல் நடத்தப்பட் டது. - என்றார்.



08. 2015.08.06 - - **9 පිටුව** - Sudaroli

**ජාතික ආණ්ඩුවක් අතාරින්නේ නෑ.**

ඉදිරියේදී ජාතික

\-

**බිහිකිරීමේ සැලැස්ම**

අණ්ඩුවක් පිහිටුවීම

කිසිසේත්ම වැලැක්විය නොහැකි බවත් එළඹෙන 17 වැනිදායින් පසුව ජාතික ආණ්ඩුවක් පිහිටුවා මුළු පාර්ලිමේන්තුවම ආණ්ඩුවක්බවට පත්කරන බවත් ප්‍රකාශකර ඇත.

- ❖ **මේ පිළිබඳවත් සන්ධාන මාධ්‍ය සාකච්ඡාවල සාකච්ඡාකිරීම කළ යුතුයි දෙමල ජාතික සන්ධානය හා පැරණි එල්ටීටීඊ සාමාජිකයින්ගෙන් සමන්විත පක්ෂත් මේ තුළ සිටිනවාදැයි ප්‍රශ්න කළ හැකියි**

**09. 2015.08.06 -තිනකුරල් - බ්‍රහස්පතින්දා - මුල් පිටුව -** Thinakural -

එක්සත් ජාතීන්ගේ මානව හිමිකම් කමිටු වාර්තාව ඉදිරිපත් වූ පසු ශ්‍රී ලංකාවේ දේශපාළන පරිසරය තුළ මහා වෙනස්කම් සහ බලපෑම් ඇතිවේවි යන්න දෙමල සංධාන නායක සම්බන්ධන් මහතා ත්‍රිකුණාමලයේ පැවති මැතිවරණ රැලියකදි පවසා ඇත.

දෙමල ජනයාට තිබෙන ප්‍රශ්න විසඳීමට මින් මතුවට කල්මරන්න බැරි බවත් එය වහා විසඳාගත යුතු බවත් මේ සඳහා දැනටමත් එක්සත් ජාතීන්ගේ මානව හිමිකම් කවුන්සිලය තීරණ 3ක් සම්මතකොට ඇති බවත් 2014 දී ගත් එම තීරණ මත ජාත්‍යන්තර පරීක්ෂණයක් පවත්වා ඇති බවත්. එම පරීක්ෂණ වාර්තාව ලබන සැප්තැම්බර් මස එළි දැක්වෙන බවත්වසා ඇත. ඒ අනුව තම අයිතීන් ලැබීම නියතයක් බව පවසා ඇත.

- ❖ **මානව හිමිකම් කොමිසමේ වාර්තාව ඉදිරිපත් වෙන්නත් කලින් මේ අය ඒ තුළ තිබෙන දෑ පිළිබඳව කතා බහ කරන්නේ කෙසේද යන්න ප්‍රශ්න කළ හැකියි.**

# ஐ.நா.அறிக்கை வெளியானதும்

# அழுத்தம் வரும்



## சம்பந்தன் நம்பிக்கை

தம்பலகாமம் நிருபர்

இலங்கை தொடர்பான ஐ.நா.வின் அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளிவந்தவுடன் இலங்கையின் அரசியல் சூழலில் பல்வேறு அழுத்தங்கள் ஏற்படுமெனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான இரா.சம்பந்தன், தற்போதைய

6

### ஐ.நா.அறிக்கை..

( முன்பக்கத் தொடர்ச்சி)

நிலையில் தாங்கள் ஒரு வரட்டுத்தனமான போக்கைக் கடைப்பிடிக்க முடியாதெனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழரின் போராட்டத்தைத் தொடர்ந்தும் நீடித்துச்செல்ல முடியாதெனவும் குறிப்பிட்ட இரா.சம்பந்தன், பிளவுபடாத நாட்டுக்குள் தமது இறைமையை அடிப்படையாகக் கொண்ட தீர்வையே தமிழ் மக்கள் வலியுறுத்துவதாகவும் ஆட்சியதிகாரத்தில் அவர்கள் பங்கு கேட்பதாகவும் தெரிவித்தார்.

திருகோணமலை மூதூர் கிழக்கு பாட்டாளிபுரம் கிராமத்தில் கிராமத்தலைவர் நா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த சம்பந்தன் மேலும் கூறுகையில்;

நாங்கள் தற்போது ஒரு வரட்டுத்தனமான போக்கை கடைப்பிடிக்க முடியாது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு எமது பிரச்சினை சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை எமது பிரச்சினை தொடர்பாக மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதில் 2014 தீர்மானத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணை இடம்பெற்றுள்ளது. அது தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளிவரவுள்ளது. அந்த அறிக்கையின் ஊடாக இலங்கையின் அரசியல் சூழலில் பல்வேறு அழுத்தங்கள் ஏற்படும்.

நாட்டில் நிலவுகின்ற பொதுவான கருத்தான தற்போதைய அரசியல் சாசனம் நீக்கப்பட வேண்டும். புதிய அரசியல் சாசனம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தப் புதிய அரசியல் சாசனத்தின் மூலம் தேசியப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகிட்ட வேண்டும். இவ்வாறான காரணங்களுக்காகவே இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. எமது பிரச்சினைகள் தொடர்பில் உண்மை அறியப்பட வேண்டும். அதனடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் வழங்கப்படவேண்டும். நடைபெற்ற அநீதிகள் இன்னுமொரு முறை நடைபெறமாட்டாது என உறுதியளிக்கப்பட வேண்டும், பொறுப்புக் கூறப்பட வேண்டிய இடத்தில் பொறுப்புக் கூறப்படவேண்டும். இதன்மூலமே நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும்.

மக்கள் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்துள்ளனர். அவை எல்லாவற்றிற்கும் மத்தியிலும் மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள். அதனை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஒரே கொள்கையின் அடிப்படையில் உள்ளார்கள். அதாவது ஆட்சி அதிகாரத்தில் தமக்கொரு பங்கு வேண்டும் என எண்ணுகிறார்கள்.

தற்போது நடைபெறப்போகின்ற பாராளுமன்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவமானது நீண்டகாலமாக எமது மக்கள் மேற்கொண்ட போராட்டத்தை நாம் நீட்டித்துக்கொண்டு போக முடியாது. பல்வேறு ரீதியாக சாத்வீகம் ஆயுதப்போராட்டம் என நாம் போராடியுள்ளோம். ஆயுதப்போராட்டம் மௌனித்ததன் பின்னர் 6 வருடமாக நாம் இராஜதந்திரப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். தமிழ் மக்கள் ஒருமித்த நாட்டுக்குள் நாடு பிளவுபடாமல் தமது இறைமையை அடிப்படையாகக் கொண்ட தீர்வைக் கேட்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் என்ன விதமாக ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்விதமாக ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதைத்தான் தம் மக்கள் கேட்கின்றார்கள். எமது அரசியல சம்பந்தமான நிலைப்பாட்டை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக கூறியிருக்கின்றோம். அதை அனைவரும் வாசிக்க வேண்டும். எமது உடனடித் தேவை சம்பந்தமாகவும் குறிப்பிட்டுள்ளோம். மற்றும் இராணுவமயமாக்கல் காணாமல் போனோர், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக நாம் கையாளவேண்டியுள்ளது.

ராஜபக்ஷவுடைய காலத்தில் இவ்வாறு கையாள்வதற்கு அவர் விரும்பவில்லை தமிழ் மக்களை மேலும் மேலும் துன்பப்படுத்துவதன் மூலம் அவர்களை வெறுப்பிற்கு உள்ளாக்கி இந்த நாட்டை விட்டு எங்காவது செல்ல வைப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஒரு மாற்றம் தெரிகிறது. அவர்கள் ஜனநாயகவாதி, தான் 5 வருடத்திற்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார். அந்தக் காலத்திற்குள் நாட்டினுடைய முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என எண்ணுகிறார். ஆனால் கடந்த 7 மாதமாக இருந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இருக்கவில்லை. அதன் காரணமாக பல கருமங்கள் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் இந்தத் தேர்தல் முடிந்த பிறகு ஆட்சியாளர்களும் நாமும் சர்வதேச சமூகமும் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளும் சேர்ந்து திட்டங்களை தீட்டி அவற்றை நிறைவேற்ற வேண்டுமென நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். இது எமது வேலைத்திட்டத்தின் முக்கியமான விடயமாக அமையும் என்றார்.